செர்கேய் பருஸ்தின்

வாருங்கள் சுற்றிப் பார்ப்போம் சோவியத் நாட்டை

செர்கேய் பருஸ்தீன்

வாருங்கள் சுற்றிப் பார்ப்போம் சோவியத் நாட்டை

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

இளம் நண்பர்களே!

நாடு சுற்றிப் பார்க்க எங்களுடன் வாருங்கள். சோவியத் யூனியனைச் சுற்றிப் பார்க்க இந்தப் புத்தகம் உங்களுக்கு முதல்முறையாக உதவும்.

பயணத்தின் துவக்கம்

தீம்கா எனது சின்னஞ்சிறு நண்பன். அவனுக்கு வயது அதிகமாக வில்லை. உங்களில் பலரையும் போல அவனுக்கும் ஐந்து வயது தான். உங்களைப் போலவே தீம்காவும் எல்லாவற்றிலும் நாட்டமுள்ளவன்.

ஒரு நாள் தீம்கா என்னிடம் கேட்டான்.

''நாம் எங்கே இருக்கிறோம்?''

''அறையில்.''

''அறை எங்கே இருக்கிறது?''

''வீட்டில்.''

''வீடு எங்கே இருக்கிறது?''

''வீதியில்.''

''வீதி?''

''மாஸ்கோவில்.''

''மாஸ்கோ?''

''சோவியத் யூனியனில். நமது நாட்டின் பெயர் இதுதான், தெரியுமா உனக்கு?''

''தெரியுமே'' என்று தலையை ஆட்டினான் தீம்கா. ''எப்படிப்பட்ட நாடு நம்முடைய நாடு?''

நமது நாட்டைப் பற்றி தீம்காவிற்கு எப்படிச் சொல்லுவதென்று நெடுநேரம் நான் ஆலோசித்தேன். முடிவில் அவனிடம் சொன்னேன்.

''நேரில் போய்ப் பார், தெரியும்.''

''எப்படிப் போவது?''

''பலவிதமாகப் போகலாம்'' என்றேன் நான். ''நாடு முழுதும் நடையாகச் சென்றோ, குதிரையில் சவாரி செய்தோ பார்ப்பது யாவற்றிலும் சிறந்தது. அப்படிச் செய்தால் எல்லாவற்றையும் பார்க்க முடியும். காரிலோ ரயிலிலோ ஏறிப் போகலாம், படகிலே பயணம் செய்யலாம்—இதுவும்

பரவாயில்லை. கொஞ்சம் வேகமாகப் போக வேண்டும் என்று நினைத்தால் விமானத்தில் பறந்து போகலாம். ஆனால் நீ அப்பொழுது எல்லாவற்றையும் பார்க்க முடியாது, ஏதோ கொஞ்சம் தான் பார்க்க முடியும்.''

''விமானத்தில் போவோமே'' என்று உடனே கூறினான் தீம்கா. ''ஆனால் விமானம் எங்கே?'' என்று வினவினான்.

''விமான நிலையத்தில் இருக்கிறது.''

''வா, விமான நிலையத்திற்குப் போவோம்'' என்று தீம்கா என்னை அழைத்தான்.

புது மாதிரியான பயணம்

மாஸ்கோவில் ஒன்று மட்டுமல்ல பலவிதமான நிலையங்கள் இருக்கின்றன. இவற்றிலிருந்து ஒரு நாளைக்கு நூற்றுக்கு மேற்பட்ட விமானங்கள் புறப்பட்டுப் போகின்றன. நூற்றுக்கு மேற்பட்டவை வந்து செல்கின்றன. உலகின் எல்லா முனைகளுக்கும் இந்த விமானங்கள் போகின்றன. நமது நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் செல்கின்றன.

''எந்த விமான நிலையத்திற்குப் போவோம்'' என்று நான் என் நண்பனைக் கேட்டேன்.

கொஞ்சமும் குழம்பாமல் ''யாவற்றிலும் முக்கியமான விமான நிலையத்திற்குப் போகலாம்'' என்றான் தீம்கா.

நாங்கள் யாவற்றிலும் முக்கியமான விமான நிலையத்திற்குச் சென்றோம். விமானம் நிற்குமிடத்தைப் பார்த்தோம். அங்கு கூட்டம் கூட்டமாக விமானங்கள் நின்று கொண்டிருந்தன. ''இல்-12'', ''இல்-14'' போன்ற

மிகச் சாதாரணமான விமானங்களும், ''தூ'', ''இல்'' போன்ற பெரிய விமானங்களும் மிகப் பெரிய ''அந்தேய்'' ரக விமானங்களும் அங்கு நின்று கொண்டிருந்தன.

திம்கா எல்லா விமானங்களேயும் நன்கு அறிந்தவன். இந்தத் துறையில் அவன் நிபுணன்.

''எந்த விமானத்தில் போகலாம்?'' என்று திம்காவைக் கேட்டேன்.

''மிகப் பெரிய விமானத்தில்'' என்ருன்.

யாவற்றிலும் பெரிய, தனிவகையான விமானம் ஒன்றில் நானும் திம்காவும் ஏறி உட்கார்ந்து கொண்டோம். பயணத்தைத் தொடங்கினேம். தனிவகையான விமானம் ஆயிற்றே, எனவே எங்கள் பயணமும் வழக்கம் போல இல்லாமல் புது மாதிரியாய் இருந்தது. ஒரே மூச்சில் நாடு பூராவும் அல்லவா போகப் போகிறேம்.

தலை நகரம்

எங்கள் விமானம் மேலே உயர்ந்து சென்றது. தீம்கா கொஞ்சம் திணறினான். பிரமாண்டமான நகரம் கீழே விரிந்து பரந்திருந்தது. சதுக்கங்கள், வீதிகள், வீடுகள், பூங்காக்கள், ஆலைகள், விளையாட்டு அரங்குகள்

எல்லாம் இருந்தன. கிரெம்ளின், காங்கிரஸ் மாளிகை, மாஸ்கோ நதி ஆகிய யாவும் கீழே தெரிந்தன.





“இது பூராவும் மாஸ்கோவா?” என்று கேட்டான் தீம்கா.

“மாஸ்கோதான், மாஸ்கோ நமது நாட்டின், ருஷ்யாவின் முதன்மையான நகரம்” என்றேன் நான்.

இயந்திரங்களும் காட்டெருதுகளும்

எங்கள் விமானம் மேகங்களுக்கு மேலே பறந்தது. எங்கு பார்த்தாலும் வானம்தான். வேறொன்றும் தெரியவில்லை. கீழே மேகங்கள், வலது பக்கம் சூரியன்.

"நன்ருய் இருக்கிறதா?" என்று தீம்காவைக் கேட்டேன்.

"நன்ருய் இருக்கிறது" என்ருன் தீம்கா. பிறகு சிறிது நேரம் ஆலோசித்து விட்டு "இல்லே, நன்ருய் இல்லே" என்ருன்.

"ஏன் அப்படி?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன் நான்.

"ஏனென்ருல்... விமானத்தில் பறப்பது நன்ருய் இருக்கிறது. ஆனுல், ஒன்றையும் பார்க்க முடிவில்லேயே, அது நன்ருய் இல்லே."

"சரி, இந்தக் குறையை நீக்கிவிடச் சொன்னுல் போகிறது! நம்முடைய இந்தச் சங்கடம் சரியாகி விடும். விமானந்தான் தனி வகையானது ஆயிற்றே..."

விமானத்தைக் கொஞ்சம் கீழே தாழ்த்தும் படி விமான ஓட்டிகளிடம் கூறினேம். விமானம் கீழே தாழ்ந்தவுடன் நிலம் கண்ணுக்குத் தெரிந்தது. கீழே உக்ரேனேப் பார்த்தோம்.

"அது என்ன?" மஞ்சளாகத் தெரிந்த ஒரு சதுர நிலப் பகுதியைச் சுட்டிக் காட்டிக் கேட்டான் தீம்கா.

"கோதுமை, வெள்ளே ரொட்டி இதிலிருந்து தான் செய்கிருர்கள். சாப்பிட்டிருக்கிருய் அல்லவா?"

தீம்கா புன்னகை புரிந்தான்.

"ஓ, சாப்பிட்டிருக்கிறேனே. அதோ, அது என்ன?"

"அது தீவனப் பயிர். கிளேவர் என்று பெயர்."

"அதோ, அங்கே என்ன?"

"சர்க்கரை வள்ளிக் கிழங்கு. இதிலிருந்து சர்க்கரை செய்கிருர்கள்."

"அதோ அது?..."

கீழே வயல்களும், கிராமங்களும், ஊர்களும் ஆலேகளும் ஒவ்வொன்

றுய்ப் போய்க் கொண்டிருந்தன. உக்ரேனின் மிகப் பெரிய ஆறு தினேப்பர். அதன் கரையில் இருக்கிறது உக்ரேனுடைய பிரதான நகரமான கிவ். அற்புதமான, அழகான பெரிய நகரம் அது.

இங்கே ஒரு அணைக்கட்டைப் பார்த்தான் தீம்கா.

''என்ன இது?''

''இது மின்விசை நிலையம். 'தினேப்ரகெஸ்' என்று பெயர். ஒரு காலத்தில் இதுதான் நமது நாட்டின் மிகப் பெரிய மின்விசை நிலையமாக இருந்தது. இன்று இதைவிடப் பெரிய மின்விசை நிலையங்கள் எல்லாம் இருக்கின்றன. இந்நிலையத்திற்கு அருகே தினேப்பர் ஆற்றில் முழு முழுக் கடல்களே உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

தினேப்ரகெஸ்ஸுக்கு அருகே ஒரு பெரிய நகரம் இருக்கிறது. இந் நகரத்தின் வீதிகள் நேர் கோடு போலச் செல்கின்றன. நகரெங்கும் பச்சைப் பசேலன்று இருக்கிறது. ஆலைகளின் புகை போக்கிகள் வானுற உயர்ந்து நிற்கின்றன.

''நம் நாட்டிலுள்ள கார்களில் மிகச் சிறியது எது தெரியுமா?''

''தெரியுமே, 'சபரோழெச்' '' என்றான் தீம்கா.

''சபரோழியே என்ற இந்த ஊரில் தான் இவ்வகைக் கார்களை உற்பத்தி செய்கிறார்கள். அதற்கு அப்பால் தன்பாஸ் என்ற நகரம் இருக் கிறது. அங்கு நிலக்கரி தோண்டி எடுக்கிறார்கள். ஊதுலைகளில் இரும்பு உருக்குகிறார்கள். நிலக்கரியும், இரும்பும் இல்லாமல் எந்த இயந்திரமும் செய்ய முடியாது. லிவோவ் என்ற உக்ரேனிய நகரில் பஸ் வண்டிகள் செய்கிறார்கள். 'லிவோவ்', 'துரீஸ்து', 'ஸ்பூத்னிக்' பஸ்களைப் பார்த்திருக் கிறாயா?''



‘‘ஓ, அழகாய் இருக்குமே’’ என்றான் தீம்கா. ‘‘அப்படியானால், எல்லாமே உக்ரேனில் தான் இருக்கின்றனவா?’’

‘‘நாம் மாஸ்கோ நகரின் மீதும் பறந்தோம்’’ என்று நான் நினைவூட்டினேன். ‘‘மாஸ்கோவிலும் எல்லாம் உண்டு. பலவகையான தொழிற்சாலைகள், ஆலைகள், பள்ளிக் கூடங்கள் யாவும் இருக்கின்றன. ஆயினும், ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு குடியரசிலும் அதற்கே உரியவை என்றும் சில இருக்கின்றன...’’

இப்படி நாங்கள் பேசிக் கொண்டிருக்கையில், கீழே சோலைகளும், திராட்சைத் தோட்டங்களும் தென்பட்டன.

‘‘இதுதான் மல்தாவியா. மல்தாவியாவில் சுவையான திராட்சை, ஆப்பிள், பேரி, ஆல்பகோடா, பெர்ரி, போன்ற விதவிதமான பழங்களும், புகையிலையும் அமோகமாய்ப் பயிராகின்றன’’ என்று விளக்கினேன்.

‘‘புகையிலையா?’’ என்று வியப்புடன் கேட்டான். ‘‘அது உனக்குத் தான் வேண்டும்.’’

‘‘ஆம், புகையிலை எனக்குத்தான்’’ என்று ஒத்துக்கொண்டேன். ‘‘ஆனால், இங்கு பழச்சாறு உனக்காகச் செய்கிறார்கள்.’’

‘‘யாவற்றிலும் பெரிய கார்கள் எங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன?’’ என்று தனக்கு விருப்பமான விஷயத்தை எடுத்துக் கொண்டான் தீம்கா.

‘‘இதோ, பார்க்கப் போகிறோம், கொஞ்சம் பொறு.’’

சற்று நேரத்தில் பைலோரஷ்யா மீது எங்கள் விமானம் பறந்தது. வயல்வெளிகள் பல வண்ணங்களிலும் இருக்கக் கண்டோம்.

‘‘இது சணல், இது உருளைக் கிழங்கு, இது முட்டைக் கோஸ், இது...’’ தீம்காவிற்கு விவரமாகச் சொன்னேன்.

மீன்ஸ்க் என்ற ஒரு பெரிய நகரம் கீழே தெரிந்தது. தீம்காவும் அதைப் பார்த்தான்.

''மிகப் பெரிய லாரிகள் இங்கு தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. இருபத்தைந்து டன் எடை தூக்கும் லாரிகள், இன்னும் பெரியதான 40 டன் தூக்கும் லாரிகள், அதையும் விடப் பெரியதான...''

'''மாஸ்' லாரிதானே?'' என்று குறுக்கிட்டான் தீம்கா. '''மாஸ்' லாரியின் பக்கத்தில் 'சபரோழெச்' காரை வைத்துப் பார்த்தால் வேடிக்கையாயிருக்கும், இல்லையா?''

தீம்காவின் கவனத்தைக் காரைப் பற்றிய பேச்சிலிருந்து திருப்பி விட வேண்டும் என்று நினைத்தேன். கீழே பெலொவேழ்ஸ்க்காயா வனம் தென் பட்டது. எங்கும் காட்டைத் தவிர வேறு எதுவும் பார்க்க முடியவில்லை. தொடக்கமும், முடிவும் இன்றி காடுகளாய் இருந்தன.

''இங்கே காட்டெருதுகள் இருக்கின்றன. காட்டெருதுகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா?''

''கேள்விப் பட்டிருக்கிறேனே'' என்றான் தீம்கா. ''மிருகக் காட்சி சாலையில் பார்த்திருக்கிறேன். 'மாஸ்' லாரிகளின் மூக்கு முனையில் நிற்பது கூடக் காட்டெருது தானே?''

காட்டெருதுகள் கூட தீம்காவின் கவனத்தை லாரிகளிடமிருந்து திருப்ப முடியவில்லையே!



அம்பர் மணிக் கற்கள்

தீம்காவும் நானும் தனியாகப் பறக்கவில்லை. விமானத்தில் வேறு பயணிகளும் இருந்தனர். இந்தப் பயணிகளில் ஒருவர் "'அம்பரை' நாம் இன்னும் கடந்தாகவில்லையா? இன்னுமா 'அம்பர்' வரவில்லை?" என்று பரபரப்புற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்.

தீம்கா ஒன்றும் புரியாதவனாய் "அம்பரா?" என்றான்.

"அம்பர் தெரியாதா? தம்பீ, நீ ஒன்றும் தெரியாதவனாய் இருப்பாய்ப் போலிருக்கே!" என்றார் அந்தப் பயணி.

தீம்கா சற்று கடுப்பாகவே, "அது என்ன அது, அம்பர்?" என்று கேட்டான்.

"அம்பர், அது தேவதாரு மரத்தின் பிசின். நெடுங் காலத்துக்கு முன்பு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு கடலில் விழுந்துவிட்ட இந்த மரப்பிசின் மணிக் கற்களாக மாறிப் போகிறது" என்று பயணி விளக்கிச் சொன்னார். "கடலில் இருந்து இந்தக் கற்களை எடுக்கிறோம்.



அம்பர் கற்களைக் கடலில் இருந்து எடுப்பவர்கள் வசிக்கும் ஊருக்கு 'அம்பர்' என்று பெயர்.''

இந்த நேரத்தில் சொல்லி வைத்தாற்போல எங்கள் விமானம் அம்பர் என்னும் அந்த ஊருக்கு மேலே பறந்தது. பால்டிக் கடலின் கரையில் இருக்கும் ஊர் இது. அம்பருக்கு அடுத்தாற்போல கலீனின்கிராத் நகரம், அதற்கும் அப்பால் ரீகா, தால்லின்...

இப்பொழுது எல்லாப் பயணிகளும் இந்த உரையாடலில் கலந்து கொண்டனர்.

''அம்பர் கவர்ச்சி மிக்கது'' என்றார் லித்துவேனியராகிய ஒரு பயணி. ''நாங்கள் பால்டிக் கடலின் கரையில் வசிக்கிறோம். கடலிலிருந்து எங்களுக்கு வேறு பலவும் கிடைக்கின்றன. உனக்கு மீன் பிடிக்குமா? நாங்கள் நாடு அனைத்துக்கும் மீன்பிடித்து அனுப்புகிறோம். விலாங்கு மீன்கூட இங்கு கிடைக்கிறது. நீ விலாங்கு மீன் சாப்பிட்டது உண்டா?''

''நாங்கள், மீன் பிடிக்கும் கப்பல்கள் கட்டுகிறோம்'' என்றார் லாத்வியராகிய வேறொரு பயணி. ''மீன்பிடிப்பதற்கு நல்ல கப்பல்கள் வேண்டும்.''

''வீடுகளுக்கு வெப்பம் தரும் பொருளான மாக்கல்லை நாங்கள் தோண்டி எடுக்கிறோம். இந்த மாக்கல் நிலக்கரியைப் போல் நன்றாய் எரியும்'' என்றார் எஸ்தோனியர் ஒருவர்.

''நாங்கள் மீன்பிடிக்கிறோம், காகிதம் செய்கிறோம், பாலும் வெண்ணெயும் நாட்டுக்குத் தருகிறோம்.''

''நாங்கள் வானொலிப் பெட்டிகள் செய்கிறோம், சிறிய வசதியான பஸ்களும் தயாரிக்கிறோம். 'லாத்வியா' எனப்படும் இந்த பஸ்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?'' என்றார் ஒரு பயணி.

''நாங்கள் கடல் எல்லைகளைப் பாதுகாக்கிறோம்'' என்றார் ஒரு மாலுமி. ''ஆகாயத்தில் விமானங்கள், கடலில் கப்பல்கள், தண்ணீருக்கடியில் நீர் மூழ்கிக் கப்பல்கள் இவை எல்லாம் நமது எல்லைகளைக் காவல் புரிகின்றன. நம் மக்கள் அமைதியாய் வாழ இவை பாதுகாப்பு அளிக்கின்றன.''



இன்னொரு முக்கிய நகரம்

எங்கள் விமானம் இறங்கத் தயாரானது.

"முதல் முறையாக விமானம் இறங்கப் போகிறது" என்றார் ஒரு விமானி.

தீம்கா கீழே தரையைப் பார்த்தான். பெரிய நகரம் ஒன்றைக் கண்டதும் அவனுக்கு வருத்தமாயிருந்தது.

"அதற்குள் திரும்பி விட்டோமா? இது மாஸ்கோ தானே?"

தீம்காவை நான் சாந்தப்படுத்தினேன்.

"இல்லை, இது மாஸ்கோ அல்ல, லெனின்கிராத் நகர். இதுவும் புகழ் பெற்ற பெரிய நகரம்."

மேலும் தொடர்ந்து பயணம் செய்வதற்கு, விமானத்தில் தேவையான வேலைகளைச் செய்ய முற்பட்டனர். அந்த நேரத்தில் நானும் தீம்கா

வும் லெனின்கிராதைச் சுற்றிப் பார்க்கச் சென்றோம். அழகான, நேரான வீதிகளில் நடந்தோம். போர்க்கப்பல் ''அவ்ரோரா'' நிற்கும் நேவா ஆற்றங்கரை ஓரமாய்ச் சென்றோம்.

''பழங்காலத்தில் இந்த இடத்தில் தெருக்களோ சதுக்கங்களோ இருக்க வில்லை'' என்று தீம்காவிடம் சொன்னேன். ''அன்று இங்கெல்லாம் சகதியும் காடுகளுமாக இருந்தது. 18-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இங்கே இந்த நகரத்தை அமைத்தனர். அதற்குப் பின்னர் பல ஆண்டு கள் கழித்து 1917இல் விளதீமிர் இலியீச் லெனின் தலைமையில்

இங்குபுரட்சி ஆரம்புமாயிற்று. ஸ்மோல்னி என்ற மாளிகையிலிருந்து லெனின் புரட்சியை வழி நடத்திஞர்.''

போர்க் கப்பல் ''அவ்ரோரா'' வெடிமுழக்கமிட்டு அறிவித்ததும் புரட்சி தொடங்கியது.

போர்க் கப்பல் ''அவ்ரோரா'' இப்பொழுது நேவா நதியில் நிற்கிறது. இளம் மாலுமிகள் இந்தக் கப்பலுக்கு வந்து பயிற்சி பெறுகிருர்கள். நமது நாட்டிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் லெனின்கிராதுக்கு வருகின்ற எல்லோரும், ''அவ்ரோரா''வைப் பார்க்காமல் செல்வதில்லை.

இந்தக் கப்பல் ஏனையவற்றைப் போன்றதல்ல, சரித்திரப் புகழ் பெற்றது.

பால்டிக் கடலிலிருந்து பல மைல்கள் பறந்து, மாபெரும் ருஷ்ய நதியான வோல்காவின் கரைக்கு வந்து சேர்ந்தோம்.

நமது மக்கள் போற்றும் அரும் பெரும் ஆறுகும் வோல்கா. இதன் கரையிலுள்ள உல்யானவ்ஸ்க் நகரில்தான் லெனின் பிறந்தார். மிக நெடுங்காலத்துக்கு முன்பு ருஷ்ய மக்கள் வோல்கா ஆற்றங்கரைகளில் தமது பகைவர்களை எதிர்த்து வெஞ்சமர் புரிந்தனர். இதே வோல்கா கரையில்தான், ஸ்டாலின்கிராத் நகருக்கருகே நமது படைவீரர்கள் பாசிஸ்டுகளை முறியடித்தனர்.

அரும் பெரும் எழில் சூழும் ஆறு என்றும் உணவளிக்கும் ஆறு என்றும் அல்லவா மக்கள் இதனைப் போற்றுகிறார்கள்.

‘‘என்ன வேண்டுமென்று விரும்புகிறாயோ, அத்தனையும் வோல்காவில் உனக்குக் கிடைக்கும்’’ என்று தீம்காவிடம் சொன்னேன்.

‘‘அப்படியா? எல்லாமா?’’ தீம்காவின் குரலில் சந்தேகம் தொனித்தது.

‘‘ஆமாம், எது வேண்டுமானாலும் கிடைக்கும்’’ என்றேன்.

தீம்கா யோசனையில் ஆழ்ந்தான். அவன் யோசித்ததைப் பார்த்தால் ஏதோ பெரிய கேள்வி கேட்கப் போகிறான் என்று தோன்றியது.

அப்படியேதான் அவனும் கேட்டான்.

‘‘கார்கள்?’’

என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

‘‘இதோ கீழே பார்! தொழிற்சாலை தெரிகிறது அல்லவா? இங்குதான் கார்களும் லாரிகளும் செய்கிறார்கள். ‘வோல்கா’ கார் உனக்குத் தெரிந்தது தான். ‘சாய்கா’ காரும் இங்குதான் செய்யப்படுகிறது. எங்கும், எந்தப் பாதையிலும் செல்லக்கூடிய ‘காஸ்-69’ காருங்கூட வோல்கா ஆற்றங்கரையில்தான் செய்யப்படுகிறது.’’

இந்த வோல்கா ஆற்றில் மோட்டார்த் தோனிகளில் கோதுமையும,



மீனும், இயந்திரங்களும், எண்ணெயும், கார்களும், லாரிகளும், கோத்திணைக்கக்கூடிய வீடுகளும் பல இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஆமாம், இவையாவும் வோல்காவின் கரைகளிலிருந்து தான் செல்கின்றன.

வோல்காவில் பெரிய பெரிய அணைக் கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. மெய்யான கடல்களும் கூட வோல்காவின் பாதையில் ஆங்காங்கே தோன்றி இருக்கின்றன.

இந்த அணைக்கட்டுகளிலிருந்து நாடு முழுதும் மின்விசைக் கம்பிகள் செல்லுகின்றன. வோல்கா நமது நாட்டிற்கு மின்விசை வழங்குகிறது.

வோல்கா ஆற்றின் கரை நெடுகிலும் பெரிய கருங் குழாய்கள் செல் கின்றன. இந்தக் குழாய்களில் போவது என்ன? பெட்ரோல் எண்ணெ யும், எரிவாயுவும். ஆம், வோல்கா ஆறு நம் நாட்டுக்கு எண்ணெயும் எரிவாயும் கொண்டு போய்க் கொடுக்கிறது.

யாவற்றையும் கண்ணுல் பார்த்துக் கொண்டும் காதால் கேட்டுக் கொண்டும் வந்த தீம்கா தன்னுள் ஏதோ சிந்தித்தவாறு இருந்துவிட்டு முடிவில் கேட்டான்:

''விண்வெளி வீரர்கள்?''

''யூரி ககாரினையும், கெர்மன் தித்தோவையும் வோல்காக்காரர்கள் என்றழைக்கலாம். அவர்களுடைய வின்வெளிக்கப்பல்கள் வோல்காப் பிரதேசத்தில் சராத்தவ் பகுதியில்தான் வந்திறங்கின.''

நிலத்தில் நடக்கிறது, ஆனல் கார் அல்ல

இதோ நமக்குக் கீழே யூரல் மலைத்தொடர். உயரமான மலைகள், எல்லையற்ற ஸ்தெப்பி வெளிகள், அடர்ந்த காடுகள் யாவும் யூரல் பிரதேசத்தில் இருக்கின்றன.

மலைகளில் உலோகக் கனிகளும், பலவகையான வண்ணக் கற்களும், ஸ்தெப்பி வெளிகளில் கடலெனக் கண்ணுக்கு எட்டிய தொலைவுக்கு விரிந்து செல்லும் கோதுமைவயல்களும், மற்றும் காடுகளிலும் துந்திர வெளிகளிலும் மதிப்பிடற்கரிய விலங்கு வகைகளும், ஆறுகளில் ஏராளமான மீன்களும் இருக்கின்றன.



யூரலில் எண்ணிறந்த வீரர்கள் பிறந்திருக்கின்றனர். போர்க்காலங் களில் இவர்கள் சக்தி மிக்க டாங்கிகளும், பீரங்கிகளும் தயார் செய்தனர் பின்னர் பகைவர்களை எதிர்த்துப் போராடி வெற்றி வாகை சூடினர்.

இப்பொழுது இவர்கள் வயல் வேலைகளுக்கு வேண்டிய டிராக்டர்களும் நடமாடும் எஸ்கவேட்டர் இயந்திரங்களும் உற்பத்தி செய்கின்றனர். உலோகங்கள் தோண்டியெடுக்கின்றனர்; மோட்டார் வாகனங்கள் தயா ரிக்கின்றனர். நமது மக்கள் யூரலை வீரஞ் செறிந்த, வலிமை வாய்ந்த யூரல் என்றழைக்கின்றனர்.



யூரல் பிரதேசம் நாட்டிற்கு உலோகக் கனிகளைக் கணக்கின்றி வழங்குவதால் இது உலைக்களம் என்பதாகவும் அழைக்கப்படுகிறது.

எனது நண்பன் நடமாடும் எஸ்கவேட்டர் இயந்திரங்களில்தான் அதிகக் கருத்துச் செலுத்தினான்.

''அவை எப்படி இருக்கும்?'' என்று கேட்டான்.

‘‘அவை தரையில் நடமாடி அங்கும் இங்கும் மண்ணை வெட்டி அள்ளும். அவற்றின் துடுப்புக் கரம் ஒவ்வொன்றும் ஒரே தடவையில் ஒரு பெரிய லாரி நிறைய மண்ணை வெட்டிக் கொட்டி விடும்’’ என்றேன்.

‘‘தரையில் எப்படி அவை நடமாடுகின்றன?’’

‘‘இரண்டு பெரிய செருப்புகள், இல்லை பனிச் சறுக்கு மட்டைகளைப் போன்ற இரண்டு மட்டைகளை ஒன்றன்பின் ஒன்ருக எடுத்துவைத்து மெல்ல நடக்கின்றன’’ என்று விளக்கிச் சொன்னேன்.



மிகவும் பெரியவை மிகவும் வளமானவை

எங்கள் விமானம் மீண்டும் தணிந்து பறந்தது. அது இருப்புப் பாதையை ஒட்டினாற்போல மெல்லச் சென்றது. தரை நன்றாய்க் கண்ணுக்குத் தெரிந்தது. இருப்புப் பாதையில் ரயில்கள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாய்ச் சென்றன.

''அவை எங்கே போகின்றன?'' என்று கேட்டான் தீம்கா.

''சைபீரியாவிற்கும், தொலைக் கிழக்கிற்கும் போகின்றன'' என்று சொன்னேன்.

''அப்படி என்றால் என்ன?''

''சைபீரியாவும், தொலைக் கிழக்கும் நமது நாட்டின் மிகப் பெரும் பிரதேசங்களாகும், வளம் மிகுந்த பகுதிகளாகும்.

சைபீரியாவின் மீதும் தொலைக் கிழக்குப் பகுதிகளின் மீதும் எங்கள் விமானம் பல மணி நேரம் பறந்தது.

திம்கா கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான்.

''இது என்ன ஆறு?''

நாங்கள் கடந்து சென்ற எல்லா ஆறுகளின் பெயர்களையும் நான் சொல்ல வேண்டியதாயிற்று: ஒப், இர்தீஷ், அங்காரா, யெனிசேய், அமூர், லேனு...

இப்பொழுது திம்கா வேறு மாதிரியான கேள்விகள் கேட்டான்.

''இந்த நகருக்கு என்ன பெயர்? அதன் பெயர் என்ன?''

சைபீரியாவிலும், தொலைக் கிழக்கிலும், பழைய நகரங்களும் புதிய

நகரங்களும் நிறைய இருக்கின்றன. அடர்ந்த காடுகள் நிறைந்த பிரதேச மான தய்காவில் புதுப் புது நகரங்களும் தொழிற் சாலைகளும் உதித்தெழுந்து வளருகின்றன.

முற்காலத்தில் நடைபெற்றது போன் றதல்ல இந்த வளர்ச்சி. முன்பெல்லாம் ஒவ்வொரு செங்கல்லாக அடுக்கி வீடு கட்டினார்கள். இதற்கு நீண்ட காலம் வேண்டி இருந்தது. இப்பொழுதோ முற்றிலும் வேறு விதமாய் வேலைகள் நடந்தேறுகின்றன. வீடுகளின் முழுச் சுவர்களும், படிக்கட்டுகளும், கூரை களும் தொழிற்சாலைகளில் செய்யப் படுகின்றன. பளுதூக்கி இயந்திரங்கள் இவற்றை அடுக்கி வேகமாய் வீடுகள் கட்டி விடுகின்றன — கதைகளில் நடை பெறுவது போல யாவும் அதிவேக மாக நடைபெற்று விடுகின்றன. ஒரு மாதத்துக்குள் ஒரு பெரிய வீடு உதித் தெழுந்து விடுகிறது. உடனே புது மனை புகுவிழா கொண்டாடுகிறார்கள்!

சைபீரியாவின் மிகப் பெரிய ஆறு களில் எல்லாம் பெரும் பெரும் மின்விசை நிலையங்கள் கட்டுகிறார்கள். ஆறுகளில் நீராவிக் கப்பல்கள் செல்லு கின்றன. துண்டு மரங்களின் பெரும் பெரும் கட்டைகளை இழுவைக் கப்பல்கள் இழுத்துச் செல்கின்றன.

பெரும் கடல் போலுள்ள பைகால் ஏரியில் ஓமுல் என்னும் உயர்ந்த வகை மீன் பிடிக்கிறார்கள். சைபீரியாவில்

எல்லையற்ற பெருவெளிகளாய்த் தெரியும் நிலங்களில் அறுவடைக் கம்பைன் இயந்திரங்கள் வேலை செய்கின்றன. அமோக அறுவடை கிடைக்கிறது.

வடக்கு சைபீரியாவில் வைரங்கள் வெட்டி எடுக்கிறார்கள். சுக்சி இனத்தவர்களாகிய வேட்டைக்காரர்கள் வால்ரஸ்களை வேட்டையாடுகிறார்கள்.

சைபீரியாவையும் தொலைக்கிழக்கையும் கடந்து நாட்டின் வேறொரு கோடியான கம்சாத்காவிற்கு வந்து சேர்ந்தோம். கம்சாத்கா எரிமலைகள் நிறைந்த பகுதி. எரிமலைகள் இங்கு புகைந்து கொண்டிருப்பதைக் கண்டோம். இந்த எரிமலைகளில் வெண்பனி இன்னமும் உருகாது இருக்-

கிறது. மலையடி வயல்களில் உருளைக்கிழங்கும் முட்டைக்கோசும் விளைகின்றன. கோழிகளும், வாத்துக்களும் மேய்ந்து கொண்டிருக்கின்றன. கடலில் நெடுந் தொலைவு செல்லும் கப்பல்கள் நிறைய மீன்களும், நண்டுகளும் பிடித்துக் கொண்டு திரும்பும். நாட்டின் வேறு எந்தப் பகுதியையும் விட கம்சாத்காவில் நண்டுகள் மிகவும் அதிகமாய்க் கிடைக்கின்றன.

“இங்கு பருவ நிலை எப்படி இருக்கும்?” என்று கேட்டான் தீம்கா. அவன் வியப்புற்றவனாய்த் தோற்றினான்.

அது ஜூன் மாதம். கோடையின் உச்சிக் காலம். நானும் தீம்காவும் மாஸ்கோவை விட்டுக் கிளம்பிய போது அங்கே பச்சைப் பசேலென்றிருந்தது. வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. மக்கள் மெல்லிய ஆடைகள் அணிந்திருந்தனர்.

இங்கோ விமானத்திற்குக் கீழே வெண்பனி வெள்ளையாய் இருந்தது. அதேபோதில் மலர்கள் பூத்துக் கொண்டிருந்தன. பசும் புற்கள் வளர்ந்திருந்தன.

''அங்கே பார். சறுக்கு வண்டிகளில் போகிறுர்கள்!'' என்று கத்தினுன் தீம்கா.

மறுகணமே சன்னல் வழியே பார்த்து விட்டுக் கேட்டான்:

''ஆற்றில் குளிக்கிறுர்களே! இங்கு குளிர்காலத்தையும் கோடை காலத்தையும் ஒரே நேரத்தில் பார்க்க முடிகிறதே, அது எப்படி?''

''குளிர்காலத்தையும், கோடை காலத்தையும் மட்டுமின்றி இலையுதிர் காலத்தையும், வசந்த காலத்தையும் கூட ஒரே நேரத்தில் இங்கு பார்க்கலாம். சைபீரியாவும், தொலை கிழக்கும் மிகப் பெரிய பிரதேசமாயிற்றே.

விமானம் வேகமாய்ப் பறக்கிறதல்லவா? அதனுல்தான் இப்படி" என்றேன்.

வடக்கே ஆர்க்டிக் கடலில் பனிக்கட்டி உடைக்கும் கப்பலான "லெனின்" மிதந்து செல்லுகிறது. வலிமை மிக்க அலகினுல் பனிக்கட்டி களை உடைத்து நொறுக்கிக் கொண்டு முன்னே போகிறது. கடற்கரையில் நாய்கள் இழுத்துச் செல்லும் சறுக்கு வண்டிகளில் குழந்தைகள் சவாரி செய்கிறுர்கள். இதே நேரத்தில் அமூர் ஆற்றங்கரையில் காட்டுக் கொடிகள் பூக்கத் தொடங்கிவிட்டன. சிறுவர்கள் தண்ணீரில் ஆடுகிறுர் கள். மக்கள் வெய்யில் களைப்பாறுகின்றனர்.

கம்சத்காவில் கடல் நீர் குளிக்க முடியாதபடி குளிராய் இருக் கிறது. ஆனுல் எரிமலைகளுக்கு அடியிலிருந்து வெந்நீர் ஆங்காங்கே ஊற்றுக்களாய்ப் பீரிட்டெழுந்து பாய்கிறது; இவ்வூற்றுக்களில் வருடம் முழு தும் குளிக்கலாம். ஆமாம், குளிர்காலத்தில் கூடத்தான். இந்த ஊற்றுக் களைச் சுற்றிலும் பல அடி உயரத்திற்கு வெண்பனி குவிந்திருக்கிறது. ஆனுல், ஊற்றின் நீர் சூடானது. குளித்தால் சுகமாயிருக்கும்.

பாலை வனமும் மக்களும்

விமானம் எங்களை சைபீரியாவிலிருந்து மத்திய ஆசியாவுக்கு இட்டுச் சென்றது.

நானும் தீம்காவும் எங்கு சென்றாலும், எங்கு இருந்தாலும் விமானத்தினுள் வெப்ப நிலை ஒரே மாதிரியாகவே இருந்தது. குளிரில் எங்களுக்கு நடுங்கவில்லை. வெய்யிலில் எங்களுக்கு வேர்க்கவில்லை. விமானத்தினுள் தான் இப்படி.

“கீழே தரையில் எப்படி இருக்கும்?” என்று புதிதாய் ஒரு கேள்வி கேட்டான் தீம்கா.

மத்திய ஆசியாவில் அதிக வெப்பமாக இருக்கும். இயற்கையை எதிர்த்து மக்கள் போராட வேண்டி இருக்கிறது. வெப்பத்தையும் வெய்யிலையும் எதிர்த்து தண்ணீருக்காகவும் அறுவடைக்காகவும் இவர்கள் போராடுகிறார்கள்.



“இயற்கையுடன் எப்படிப் போராடுவது?” என்று கேட்டான் தீம்கா.

“கீழே பார்! புரிந்து கொள்வாய்” என்றேன் நான்.

கீழே எல்லாவற்றையும் பார்க்க முடிந்தது. மக்கள் சிறிதும், பெரிதுமாகக் கால்வாய் வெட்டுகிறார்கள். அதில் தண்ணீர் விடுகிறார்கள். இந்தக் கால்வாய்கள் மூலம் தான் பருத்தி வயல்களுக்கும், திராட்சைத் தோட்டங்களுக்கும், மற்ற பழத் தோட்டங்களுக்கும் நீர் பாய்ச்சுகிறார்கள். எங்கு பார்த்தாலும் நூற்றுக் கணக்கான மைல்களுக்கு ஒரே மணலாய்த் தெரியும் கராக்கூம் பாலைவனத்தின் குறுக்கே துர்க்மேனிய மக்கள் கராக்கூம் கால்வாய் வெட்டியிருக்கிறார்கள்.

“கால்வாய்கள் இல்லாத இடத்தில் என்ன செய்வதாம்?” என்று வினவினான் தீம்கா.

“வாய்க்கால்கள் இல்லாத இடத்தில், விமானங்கள் தரையை ஒட்டினாற்போலப் பறந்து கோதுமை, ரை பயிர்களுக்கு தண்ணீர் ஊற்றுகின்றன. நிலத்தில் லாரிகள் நீரை எடுத்துச் சென்று நீண்ட குழாய்கள் மூலம் நீரைத் தெளித்துச் செல்லுகின்றன. இது பார்ப்பதற்கு செயற்கை மழைபோல் இருக்கும்.”

ஒரு காலத்தில் கஸாக்ஸ்தான் வறண்ட பொட்டல் பிரதேசமாய் இருந்தது. கொதிக்கும் வெய்யிலில் ஒரு பயிரும் வளரவில்லை. ஆனால்

துணிவு மிக்க மக்கள் இங்கு வந்து இப்பொழுது இந்தப் பிரதேசத்தை அடையாளம் தெரியாதபடி மாற்றி விட்டார்கள். புதிய நகரங்களும், கிராமங்களும் இங்கு தோன்றியுள்ளன. இங்கு வீதிகள் எல்லாம், நேரான வீதிகளாக இருக்கின்றன. பச்சைப் பசேலென்று தோட்டங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இவற்றைச் சுற்றிலும் பல மைல் தொலைவிற்கு வயல் வெளிகள் விரிந்து செல்கின்றன.

எந்தப் பிரதேசத்தின்மீது எவ்வளவு வேகமாக எங்கள் விமானம் பறந்த போதிலும் வயல்கள் மட்டும், மறையாமல் முடிவின்றி தொடர்ந்து கண்ணுக்குத் தெரிந்தன. லாரிகளும், டிராக்டர்களும் புழுதியைக் கிளப்பிக் கொண்டு விரைந்தோடின. ஆற்றங்கரைகளிலும் ஏரி ஓரங்களிலும், குதிரைகளும் ஒட்டகங்களும் மந்தை மந்தையாய்ப் போய்க் கொண்டிருந்தன. அவ்வப்பொழுது குட்டையான கழுதைகள் போவதையும் பார்க்க முடிந்தது. இந்த வட்டாரத்து மக்கள் உலோகக் கனிகள் தோண்டி எடுத்து உருக்கி எஃகு தயாரிப்பதற்கு தெரிந்து கொண்டார்கள். இந்த எஃகிலிருந்து சிறந்த இயந்திரங்கள் செய்கிறார்கள். எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னவென்றால் இதுகாறும் தரிசாகக் கிடந்த பெரும் பெரும் நிலப் பரப்புகளை எல்லாம் உழுது பயிர் நிலங்களாய் மாற்றிச் செல்கிறார்கள்.

மத்திய ஆசியாவின் எல்லாப் பகுதிகளிலும் தோட்டங்களும், பருத்தி வயல்களும் பூத்துக் குலுங்குகின்றன. பெரும் பெரும் ஆட்டு மந்தைகள் மேய்கின்றன.

தோட்டங்களில் ஆப்பிளும் பேரிக்காயும், ஆல்பக்கோடாவும் பீச் பழங்களும் பயிராகின்றன.

பருத்தி நமக்கு ஆடை தருகிறது. சட்டைகளும் ஏனைய ஆடை வகைகளுக்கும் வேண்டிய துணி பருத்தியிலிருந்துதான் கிடைக்கிறது.

ஆடுகளிலிருந்து கம்பளியும், இரைச்சியும் கிடைக்கின்றன.

மத்திய ஆசியாவில் ஆடுகள் ஏராளமாய் இருக்கின்றன.

இந்த ஆடுகளை எண்ண முடியுமா? முடியாது.

ஆட்டு மந்தைகள் மலைச் சரிவுகளில் மேய்கின்றன. ஒரு இடத்தில் இருக்கும் புல்லை எல்லாம் மேய்ந்து தின்றதும், ஆடுகளை வேறு இடத்திற்கு ஓட்டிச் செல்கிறார்கள். எப்பொழுதும் இவற்றை நடத்தியே ஓட்டிச் செல்ல வேண்டும் என்பதில்லை. சில நேரங்களில் விமானங்களிலும், ஹெலிகாப்டர்களிலும் அவற்றைத் தூக்கிச் செல்வதும் உண்டு.

ஆடுகள், ஆகாயத்தில் பறந்து பழக்கப்படாதவை. என்றாலும் அவற்றுக்கு இந்தப் பயணம் மிகவும் பிடித்துத்தான் இருக்கிறது. ஒரு மணி நேரத்திற்குள் அவை சத்துள்ள பசும்புல் நிறைந்த புதிய மேய்ச்சல் வெளிக்கல்லவா வந்து சேர்கின்றன. ஆகவே மகிழ்ச்சியுடன் அவை விமானங்களில் பறக்கின்றன.

மூன்று கடல்களின் கரையிலே



நாங்கள் காஸ்பியன் கடலை நெருங்கிச் செல்லச் செல்ல எண்ணெய்க் கிணற்றுக் கோபுரங்கள் ஏராளமாகத் தென்பட்டன. கராக்கூம் மணல் வெளிகளில் எண்ணெய் கோபுரங்கள்! கடலுக்குள்ளேயும் எண்ணெய்க் கோபுரங்கள்! காஸ்பியன் கடலின் கரையிலும் இந்தக் கோபுரங்கள்! துர்க்மேனியாவிலும், காக்கசஸிலுள்ள அஸர்பெய்ஜானிலும் எண்ணெய்

உற்பத்தி செய்கிறார்கள். கார் ஆகட்டும், கப்பலாகட்டும், விமானமாகட்டும் இந்த எண்ணெயில்லாமல் ஓட முடியாது. இந்த எண்ணெயிலிருந்து பெட்ரோல் மட்டும்தானா தயாரிக்கிறார்கள். ஆடைகள், மென்மூடித் தோல்கள், ஏன் இயந்திர பாகங்களும் கூட இதிலிருந்து செய்கிறார்களே!

காக்கசஸ், நாட்டிற்கு எண்ணெய் மட்டுமின்றி, இரும்புத் தாதுக் களும், ஆடுகளும், பழங்களும், ரொட்டியும், திராட்சையும், இயந்திரங் களும் மற்றும் பலவும் தருகிறது.

நாட்டியத்திற்கும், பாட்டுக்கும், குதிரைப் பந்தயங்களுக்கும் பெயர் பெற்றவர்கள் காக்கசஸ் மக்கள். அவர்களுடைய பாட்டுகளைக் கேட்கையில் நமக்கும் பாட வேண்டும் போலிருக்கும், நாட்டியங்களைப் பார்க்கையில் நாமும் ஆட வேண்டும் போல இருக்கும்.

உயரமான காக்கசஸ் மலைகளைக் கடந்து கருங்கடலையும், அசோவ் கடலையும் நோக்கிப் பறந்தோம்.

"இது என்ன?" கீழே கையைக் காட்டிக் கேட்டான் தீம்கா.

அழகான வீடுகள், பசுமையான தோட்டங்கள், பூங்காக்கள், மணல் நிறைந்த கடற்கரை ஆகிய யாவும் கீழே தெரிந்தன.

"விடுமுறை நாட்களில் மக்கள் இங்கு வந்து தங்கி ஓய்வெடுத்துக் கொள்கிறார்கள்."

''காஸ்பியன் கடல், கருங்கடல், அசோவ் கடல் இவற்றின் கரைகளில் ஆரோக்கிய விடுதிகளும், பயனீர் முகாம்களும், ஒய்வு விடுதிகளும் ஏராளமாய்க் கட்டியிருக்கிருர்கள். இங்கு தங்கி ஓய்வெடுத்தும், சிகிச்சை பெற்றும், வெயிலில் காய்ந்தும் உப்பு நீரில் குளித்தும் மக்கள் தம் உடல் நலம் பேணுகின்றனர்.

நமக்காக
பிறருக்காக

நானும் தீம்காவும் கருங்கடலில் நிறையக் கப்பல்களைப் பார்த்தோம். இந்தக் கப்பல்களில் டிராக்டர்களும், கோதுமையும், லாரிகளும் இயந்திரங்களும் ஏற்றப்பட்டிருந்தன.

''பால்டிக் கடலிலும் இதே மாதிரித்தானே இருந்தது'' என்றான் தீம்கா.

''ரொம்ப சரி!''

''தொலை கிழக்கிலும் இதேபோலத்தான்.''

''ஆமாம்.''

''இந்தக் கப்பல்கள் எல்லாம் எங்கே போகின்றன?'' என்று கேட்டான் தீம்கா.

''இவை எல்லாம் பல்வேறு நாடுகளுக்குச் செல்கின்றன. நமது மக்கள் வேலை செய்வது தமக்காக மட்டுமல்ல. பிற நாட்டு மக்களும் இனிது வாழத் துணை புரிகின்றனர். இந்தியாவிற்கும் போலந்துக்கும் போகிற கப்பல்கள் புதிய தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இயந்திரங்களை எடுத்துச் செல்கின்றன. கியூபாவுக்கும், ஆப்பிரிக்க நாடுகளுக்கும் தானியங்களும், இயந்திரங்களும் ஏற்றிக்கொண்டு செல்கின்றன. வியத்-நாம், பல்கேரியா, மங்கோலியா, ஹங்கேரி, கொரியா, யுகோஸ்லாவியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லோவாகியா, ருமேனியா போன்ற இன்னும் எத்தனையோ நாடுகளுக்கு, அவற்றுக்குத் தேவையான பலவிதமான பொருள்களை, ரயில்களும் கப்பல்களும் விமானங்களும் எடுத்துச் செல்கின்றன.

தரைக்கடியில் புகைக்கப்பட்டிருக்கும் குழாய்கள் மூலம், நமது நேச



நாடுகளுக்கு எண்ணெய் அனுப்புகிறோம். இன்னும், மின்கம்பிகள் மூலம் மின்விசை பிறநாடுகளுக்கு செல்கின்றது.

நானும் எனது நண்பன் தீம்காவும் நாடு முழுதும் சுற்றிப் பார்த்தோம். ஒவ்வொரு இடத்திலும் புதிதாய் ஏதேனும் ஒன்றைக் கண்ணுற்றோம்.

நம்முடைய நாடு பெரியது, வளமானது, வலிமை மிக்கது, நட்புணர்வு கொண்டது, இனிமையானது.



செர்கேய் பருஸ்தீன்

வாருங்கள் சுற்றிப் பார்ப்போம் சோவியத் நாட்டை

ஓவியர்: யு. கரோவின்
மொழிபெயர்ப்பாளர்: வ. சண்முக சுந்தரம்

С. БАРУЗДИН

ПРИГЛАШАЕМ ВАС
ПУТЕШЕСТВОВАТЬ ПО СССР

на тамильском языке